**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**<u>அசல் வழக்கு எண்.</u>** 28/2025

இன்று 2026 ம் ஆண்டு மார்ச் 02 நாள் திங்கள் கிழமை இன்று இந்த பி.வா.சா.3 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின்) திருமதி.A.சுபஸ்ரீ,L.L.M., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : ஆதம் பாஷா

தந்தை பெயர் :

வயது :

தொழில் :

---

**<u>முதல் விசாரணை</u>**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு சாட்சிசொலவதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைபபாணை வரவில்லை. நாசர் அலி கேட்டுக்கொண்டதால் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் கொடுமுடியில் மெஸ் வைத்து நடத்தி வருகிறேன். வழக்கு பரிகாரம் மற்றும் விபரம் தெரியும். சொத்து மதிப்பு என்ன போடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் வாதிகள் அவர்களுக்கு உண்டான இடத்தை கேட்கிறார்கள்.

2. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். நான் நாசர்அலியின் மனைவியின் சகோதரர் என்றால் சரிதான். அதனடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். நாசர் அலிக்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் திருமணம் நடந்து 30 ஆண்டுகள் ஆகிறது. திருமணத்திற்கு முன்பே சொந்தம் உள்ளது. சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. வீடுகள் எந்த அளவில் உள்ளது என்று தெரியாது. வீட்டு வரி குடிநீர்வரி, மின் இணைப்பு ஆகியவை யார் பெயரில் எந்த எண்ணில் உள்ளது என்றால் அவர்களது தாயார் பெயரில் உள்ளது எண் என்னவென்று தெரியாது.

3. வீடு எப்போது கட்டப்பட்டது என்றால் தெரியாது. நாசர் அலி பெற்றோர்கள் எந்த ஆண்டு இறந்தார்கள் என்று தெரியாது. அவர்களுக்கு என்ன உடல் உபாதை இருந்தது என்று எனக்கு தெரியாது. அதற்கு என்ன வகையான சிகிச்சை எடுத்துகொண்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் நோய் உள்ளது என்று தெரியும் என்ன நோய் எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார்கள் என்று தெரியாது. நாசர் அலியின் உடன்பிறந்தவர்கள் ஒன்றுமையாக உள்ளார்களா என்றால் பேச்சு வார்த்தை தற்போது இல்லை என்று நினைக்கிறேன்.

4. நாசர் அலியின் பெற்றோர்கள் அனைத்து குழந்தைகளையும் ஒற்றுமையாக வளர்த்தார்கள் என்றால் தங்கைகளுக்கு திருமணம் நடைபெறும் வரை சந்தோஷமாக தான் இருந்தார்கள். அதன் பிறகு என்ன நடந்தது என்று தெரியாது. பெண் பிள்ளைகளுக்கு அவர்களது பெற்றோர்கள் தான் முன்னின்று திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் முன்னின்று திருமணம் செய்து

வைத்தார்கள் ஆனால் அதற்கான செலவை நாசர்அலி செய்தார். நாசர் அலி முதலில் கம்பெனி நடத்திவந்தார் தற்போது சும்மா தான் இருக்கிறார்.

5. பெண் பிள்ளைகளுக்கு எந்த ஆண்டு எவ்வளவு செலவு செய்து திருமணம் நடந்தது என்றால் எந்த ஆண்டு என்று தெரியாது. 5 முதல் 8 பவுன் போட்டு திருமணம் செய்து வைத்தார். தாவா சொத்து யார் பெயரில் உள்ளது என்று நான் பார்க்கவில்லை என்றால் அவர்களது தாயார் பெயரில் உள்ளதாக சொன்னார்கள். அவர்களது தாயார் அவரது காலத்திற்கு பிறகு சொத்து யாருக்கு செல்ல வேண்டுமென்று எந்த விருப்புறுதி ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்றால் எழுதி வைக்கவில்லை. ஆனால் சொத்து பையனுக்கு தான் என்று சொன்னார். எனக்கு சொத்து பொறுத்தோ குடும்பத்தை பொறுத்தோ எந்த விபரமும் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மேற்படி குறுக்கு விசாரணையை 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்கிறார்கள்.**

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது**.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.02 14:55:38 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.